தோழர் ஏ. கோவிந்தசாமி வெற்றி வாகைசூடினர்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: புரட்டாசி 22உ வெள்ளி (8—10—54) வெளியூர்: புரட்டாசி 23உ சனி (9—10—54)	மலர்: 2 இதழ்: 100

கோழியை விழுங்கிய மாடு சூரியன் முன் சரணாகதி!

தென் ஆற்காடு மாவட்டக் கழகத் தேர்தல் முடிவு

ஏ. கோவிந்தசாமி 10,003 ஓட்டுகள்
நடராஜ கவுண்டர் 4,759 ஓட்டுகள்

தென்னாற்காடு மாவட்டக் கழகத் தேர்தலில் கானை—கஞ்சனூர் தொகுதிக்கு தி. மு. கழகப் பொறுப்பாளராயிருந்து பணியாற்றிய தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, அவர்கள் உழவர் கட்சிச் சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சிச் சார்பில் தோழர் நடராஜ கவுண்டர் போட்டியிட்டார்.

தோழர் நடராஜ (கவுண்டரை) ஆதரித்து கனம் ராமசாமி (படையாச்சி) உட்பட காங்கிரசுடையவும், அது விழுங்கிவிட்ட கோழி சின்னமுடைய உழைப்பாளர் கட்சியுடையவும் முழுச் சக்தியும் திரண்டு நின்று தோழர் ஏ. கோவிந்தசாமியை எவ்வகையிலேனும் தோற்கடித்துவிட முயன்று படுதோல்வி கண்டிருக்கின்றனர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி 10,003 ஓட்டுகள் பெற்றிருக்கிறார். எதிர்த்து நின்ற நடராஜ (கவுண்டருக்கு) 4,759 ஓட்டுகளே கிடைத்திருக்கின்றன.

தோழர் ஏ. கோவிந்தசாமி 5,244 ஓட்டுகள் அதிகம் பெற்று, மாபெரும் வெற்றி வாகை சூடியுள்ளார்.

மாநிலத்தில் நடைபெற்ற வேறு மாவட்டக் கழகத் தேர்தலில் இதுவரை இத்தனை அதிகமான ஓட்டு யாருக்குமே பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(மேலும் விபரங்கள் அடுத்து வரும்)

'மொராக்கோ ஒரு இந்தோ-சீனமாக உருவாகிறது!'

'புரட்சிப் புயலின் தரத்தை ஆப்பிரிக்கரால் தான் சமாளிக்க முடியும்'

'சுல்தான் பெயர் கூறி தங்கள் தொழுகையைத் துவங்குகின்றனர்'

'நாடு கடத்தப்பட்ட சுல்தான் வருகைக்கு 98 சதவிகித மக்கள் ஆதரவு'

அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதியான டக்லஸ் அறிவிப்பு

பிரான்சின் குடியேற்ற நாடாக இருந்துவருகிறது, வட ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ! அங்குள்ள சுல்தானை, அவருடைய சுதந்திர வேட்கைக்காக, நாடு கடத்திவிட்டது பிரெஞ்சு வெளிநாட்டு இலாகா! அவருக்குப் பதில், தனக்குச் சாதகமாக உள்ள ஒருவரை, அப்பீடத்தில் அமர்த்தியது!

அங்குள்ள 'மூர்' மக்களின் ஆதரவு புதிய சுல்தானுக்கு அறவே இல்லை. மீண்டும் முன்னாள் சுல்தான் நாடு திரும்பி, ஆட்சி பீடமேறுவதையே மொராக்கோ மக்கள் விரும்புகின்றனர்.

அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளில் ஒருவரான ஜஸ்டிஸ் டக்லஸ் மொராக்கோ சென்று, நிலைமையை நேரில் கண்டறிந்து, அறிக்கை ஒன்று தீட்டியுள்ளார்.

'மொராக்கோ ஒரு இந்தோ-சீனமாக உருவாகிக் கொண்டிருக்கிறது' என்று டக்ளஸ் அறிவித்துள்ளார். அதைத் தடுக்கவேண்டுமானால், பிரான்ஸ் தனது குடியேற்ற நாட்டுக் கொள்கையை மாற்றிக்கொண்டு, விரிவான அரசியல் சீர்திருத்தங்களைப் புகுத்த உடனடியாக முன்வரவேண்டும் என்றும், இல்லையானால் அங்கு வீச இருக்கும் புரட்சிப் புயலின் தரத்தை ஆப்பிரிக்கர்களால்தான் புரிந்துகொள்ள முடியுமென்றும், எச்சரித்துள்ளார்.

அங்குள்ள மக்களுடன் கலந்து உரையாடுவதற்கு மொழி பிரச்னை ஒரு தடையாக இருந்த போதிலும், தனக்கு வழிகாட்டியாக இருந்த இளைஞன் மூலம் மூர் மக்களின் உள்ளக் கிடக்கையைத் தாம் நன்கு புரிந்துகொண்டதாகவும், 98 சதவிகித மக்கள், நாடு கடத்தப்பட்டுள்ள சுல்தான் திரும்பி வருவதில் விருப்பமுடையவர்களாக உள்ளனர் என்றும், சுல்தான் பெயரை உச்சரித்தே தங்கள் தொழுகையை அம்மக்கள் துவங்குகின்றனர் என்றும், டக்ளஸ் விளக்கியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கையின் குறிக்கோள்!

இந்தியா—இலங்கை பிரதமர்கள் சந்திப்பு

பம்பாய், அக். 8—

இலங்கை முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகாவும், இலங்கை சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகாவும், இந்தியப் பிரதமர் நேருவை இன்று டில்லியில் சந்திக்கின்றனர். 'நாடற்றவர்கள்' எனக் கருதப்படும் 6 லட்சம் இலங்கை இந்தியர் பிரச்னை பற்றி அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்துவர்.

இலங்கைக்கும் 'பாரமாக' இருக்காதபடி, இந்த 6 லட்சம் இலங்கை-இந்தியர் பிரச்னைகள் கவனிக்கப்பட்டு நேரு வற்புறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டம் ஆட்சியில் கொச்சி மக்கள் கசப்பு

ம. சோ. க. சட்டசபை உறுப்பினர்களுக்குள்ளும் திரு—கொச்சி என்ற பிளவு!

திரு—கொச்சியில் உள்ள பி.-சோ. மந்திரிசபை, தொழிலபிவிருத்தி சம்பந்தப்பட்ட வகையில், கொச்சிப் பகுதியை அலட்சியப்படுத்தி வருவதாக பொதுவான ஒரு கருத்து நிலவிவருகிறது.

மந்திரிசபையில், கொச்சிப் பகுதிக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்ற குறை முன்போலவே தொடர்ந்து இன்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

12 கம்யூனிஸ்டுகளுக்கு தூக்கு தண்டனை

வேவு பார்த்ததாகக் குற்றச்சாட்டு

டெஹ்ரான், அக். 7—

இராஜத் துரோகம், வேவு பார்த்தல், பிற நாட்டவர்களுக்கு உளவு கூறல் ஆகிய குற்றங்களைச் செய்ததாக 12 கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது வழக்குத் தொடர்ந்தது, பெர்சிய சர்க்கார். அவ்வழக்கை விசாரித்த இராணுவ கோர்ட், அப்பன்னிரண்டு பேர்களுக்கும் தூக்கு தண்டனை அளித்துள்ளது.

சர்வதேச மன்ற நீதிபதியாக ஜபருல்லா தேர்வு!

நியூயார்க், அக். 7—

சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு உறுப்பினராக இருந்த பி. என். ராவ் காலமானதால், அந்தக் காலி இடத்திற்கும் பாகிஸ்தான் அயல் நாட்டு மந்திரி முகமது ஜபருல்லா கான், ஐ. நா. பொதுச் சபையின் மற்றோர் மன்று சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக இந்தியாவைச் சேர்ந்த ராதா வினோத பால் என்பவர் போட்டியிட்டுத் தோல்வியுற்றார்.

3,000 இரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

வியாபாரிகளும் ஆதரிக்கின்றனர்!

வேலை நேரத்தைத் திருத்தியதே காரணம்!

இங்குள்ள இரயில்வே சாமான்களை ஏற்றவும், இறக்கவுமான தொழிலில் ஈடுபட்டு வந்த 3,000 தொழிலாளர்கள், முதல் தேதியிலிருந்து, வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். வேலை நேரத்தை இரயில்வே இலாகா, மாற்றி அமைத்ததின் காரணமாகவே, இவ்வேலை நிறுத்தம் துவக்கப்பட்டு இருக்கிறது.

இதன் பலனாக, வெளியேற்றப்படாமல் ஏராளமான சரக்கும், நிலக்கரியும் கூட ஷெட்டில் தேங்கிக் கிடப்பதால், மேற்கொண்டு பதுடேல்லிக்கு, மேற்கூறிய பொருட்கள் ஏற்றுமதி செய்யக்கூடாது என, இரயில்வே இலாகா தடை விதித்திருக்கிறது.

இதுவரை, கோடையில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், மாரியில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையிலுமாகத்தான் இறக்குமதி செய்வதாக இருந்த தொழிலாளர் வேலை நேரத்தை, காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையில், இரண்டு ஷிப்டுகளாக தொழிலாளர் வேலை செய்ய வேண்டும் என இரயில்வே இலாகா மாற்றிவிட்டது. இம்மாற்றத்தால், இப்போது வேலை செய்வோர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு தொழிலாளர்கள் தேவைப்படுகிறது என்றும், புதிய வேலை நேரம் கடைமுறைக்கு ஒத்து வராதது என்றும் காரணம் காட்டி, தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தந்துள்ளனர் வியாபாரிகள்.

இந்தியப் பண்பாடாம்!

★

அண்மையில் ஐதராபாத்திலே கோர ரயில் விபத்தொன்று ஏற்பட்டதல்லவா? அந்த விபத்தில் பலியானவர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள்—சுமார் ரூ 8000 பெறுமான நகைகள், கடிகாரங்கள், ரொக்கம் இப்படியாக ஐதராபாத் காங்கிரஸ் தலைவரின் வேண்டுகோளின்படி போலீஸ் ஸ்டேஷன்களிலும், காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்திலும் கொண்டுபோய் சேர்க்கப்பட்டுள்ளனவாம்!

—'திரணி'

இது எந்தப் பண்பாடோ?

பம்பாய், அக். 7—

பம்பாய் சுங்க இலாகாவினர் சாகிர் ஜாபிர்க்கு ரூ. 2 லட்சம் பெறுமான கள்ளத் தங்கத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். பம்பாயின் முக்கிய தங்க மார்க்கெட்டான சாவேரி பஜாரில் நாசர் ஒருவர், இந்தத் தங்கத்தை விற்பனை செய்ய முயன்றபோது சுங்க இலாகாவினர் கைப்பற்றினர்களாம். இந்தத் தங்கத்தைக் கொடுவந்திருந்த கடத்திய நாசச் சந்தேகம் இரண்டு நபர்களையும் அவர்கள் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 8—10—54 வெள்ளி

யார் கண்டார்கள்?

★

ஜாதிய சங்கங்களிலோ, மாநாடுகளிலோ பார்ப்பன மக்கள் நீங்கலாக உள்ள மற்ற திராவிட மக்கள் கலந்து கொண்டால், அவர்களை ஜாதி வெறியர்கள் என ஏசியும், குறைகளைக் களைய முயற்சித்தால், அவர்களைக் குறைமதியினர் என அர்ச்சித்தும், உரிமைகள் கோரினால், அவர்களை வகுப்புவாதிகள் எனக் கண்டித்துக் குறை படித்தியும், பார்ப்பனக் குடிப் பிறந்தோர் வேசியும் ஏசியும் வந்துள்ளனர் என்ற உண்மையை, எண்ணத் தொலையாத சான்றுகளுடன், விளக்கிக்கொண்டே இருப்பதுதான் தென்னாட்டு அரசியல் வரலாறு. உத்தி, வேளிக்கை, இசைத்துறை, கல்விக் கூடம், நீதிமன்றம், அரசாங்க அலுவலகம், புகை வண்டி நிலையம், அஞ்சல்மனை, அரசியல் மேடை, செய்தித்தாள் பிறப்பிடம், சட்ட சபை ஆகிய இன்றியமையாத வாழ்க்கைத் துறை அனைத்தும், பல ஆண்டு காலம் முன்பு வரையில், பார்ப்பனக் குடிமக்களின் கோலுமண்டபமாக இருந்து வந்ததையும், தென்னாட்டு வரலாறு மறைமறைவித்துக் கொண்டுதான் இருக்கிறது. திருக்கோயில்களில், அக்குடி மக்களுக்கு இருந்த—இன்னும் இருந்துவருகிற தனிச்செருக்கு உரிமையைக் குறிப்பிடாமல் இருப்பதே நலம்.

ஆற்றங்கரையோரத்திலும், ஆரண்யவாசத்திலும் இருந்து முளைத்த, ஆரிய சிறுகுடி மக்களின் சிறு வாழ்வு, கால வேகத்தால், உலகில் உள்ள எல்லா நல்வாழ்வுத் துறைகளிலும் புகுந்து, ஆட்சிபீடத்தை அருகுவேர் வேரோடி, சொந்தக் குடிப் பிறந்தவர்களுக்கு மட்டும் தண்ணீரும் நிழல் தந்து, மற்ற பெருவிருத்து விளைவு ஒருவருக்கும் நிழல் தராததுபோல், பிற குடிப் பிறந்தவர்களை ஒதுக்கித்தள்ளி வந்தது. புராணக் கதை போன்ற வரலாறுகளும், காட்டின் கதை முறைகளும், இந்த வேதனை தரும் சம்பவங்களைத்தான் முழங்கிக்கொண்டு இருக்கின்றன.

நர்மதைக் கரையின் ஆரம்பித்த ஆரிய வாழ்வு, பெருநிலத்தெழுந்து வடித்தவர்களை விழ்த்தவும், ஆட்சி மன்றத்திலிருந்து ஆச்சாரியார் போன்ற அரசோச்சவுமான மகோன்னத நிலைக்கு உயர்ந்து போய் இருக்கிறது! பிச்சை புகுவதில் துவங்கி, நாட்டு மக்களை அச்சுறுத்தும் அதிகார பீடத்தைச் சூழ்ந்த கொட்டத்தில் வந்து நிற்கிறது!

இடம்பாதத் தீவிரம், இவ் வளர்ச்சியின் வேகம், சில ஆண்டு காலமாகக் குறைந்து காணப்படுகிறது என்பதில் ஐயமில்லை. இம்மாற்றம் கூட, தானாக உருவாகிவிடவில்லை. 'என்னா உரிமைகளும் எங்களுக்கே; மற்றவர்களுக்குக் கடுகத்தனையும் கிடையாது!' என, சுக வாழ்வை சொந்த மக்களுடன் பகிர்ந்துண்டு வர அசைக்கப்பட்டுவிடாதவர்களுக்கு இருந்ததுபோல் இருந்து ஏற்பட்ட இரக்க சிந்தனையாலோ, நேர்மை நாட்டத்தாலோ, விரிந்த நெஞ்சினாலோ, நீதிவழி நிற்கும் நினைப்பாலோ, அல்லவே அல்ல!

பிறர் நுழைய விடாமல், எல்லாத் துறைகளிலும் குறிப்பிட்ட ஒரு சமூகத்தவரே மண்டிப் பாம்பு போல் புரண்டு கொண்டிருந்த காரணத்தால், வெருண்டுவிட மக்கள் உள்ளத்திலே அதிருப்திப் புகைச்சல் கிளம்பத் தொடங்கியது. தமதெனவிழா பிறருக்குரியவரான டாக்டர் நாயரும், சர். தியாகராயரும், திராவிட மக்களின் விடிவெள்ளிபோல, தென்னாட்டு அரசியல் வானில் தோன்றினர். உறங்கிக் கிடந்த பெருஞ் சமூகம் உறக்கம் நீங்கிற்று! அடித்துக் கிடந்த கலம் பொருந்தியக் கூடம் எழுந்து நின்றது! அடிமை எனக் கருதி அஞ்சிக் கிடந்த கூட்டம், அடிமை நிலையை உணர்ந்து, அந்த நிலை அறுத்தெறிய முனைந்தது! உரிமைக் குரல் கிளம்பியது!

தென்னாட்டு வரலாறு மாற்றப்பட்டது. ஓரிடத்தைத் தேக்கிச் சாய்த்து கொண்டிருந்த உரிமையாது, வேறு திசையிலும் திரும்ப ஆரம்பித்தது.

'சேர வாரும் ஜெகத்தீரே!' என்பதற்குப் பதில், 'சேர வாரும் ஜாதியினரே!' எனப் பார்ப்பனக் குடிமக்கள் செயல் புரிந்ததின் விளைவுதான், மற்ற மக்களின் உரிமை கீதம்! 'யான் பெற்ற இன்பம் இவ் வையகமெல்லாம் பெறுக' என அவ்வையகத்தையும் அணைத்துச் செயல்படுவதற்கும் பதிலாக, 'யான் பெற்ற இன்பம் என் இனம் மட்டுமே பெறுக' எனப் பார்ப்பனக் குடிமக்கள் செயல் நடத்தியதின் எதிரொலிதான், பிறரின் சுதந்திர எக்காளம்!

மேலே எடுத்துக் காட்டியுள்ள உண்மையை, 'சுதேசமித்திரன்' ஆசிரியர் தோழர் சி. ஆர். சீனிவாசன் அவர்கள், சில தினங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு பார்ப்பனர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில், ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வளவு காலம் தேவைப்பட்டது, மறுக்க முடியாத வரலாற்று உண்மையை, ஒப்புக்கொள்ள இத்தனை காலம் தேவைப்பட்டது, தோழர் சீனிவாசன் போன்றவர்களுக்கெல்லாம், மற்ற பார்ப்பனர்கள் எல்லாம் இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ள, இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படுமோ, யார் கண்டார்கள்?

தொழிற் கல்வி வளர்ச்சிக்கு ரூ. 1 கோடி

தென் மாநிலங்களுக்குக் கிடைக்கும்?

சென்னை, அக். 6—

அகில இந்திய தொழிற் கல்விக் குழு நியமித்த தென் பிராந்திய அபிவிருத்திக் குழு, மைசூர், திரு—கொச்சி, ஆந்திரா, சென்னை, ஐதராபாத் ஆகிய மாநிலங்களில் தொழிற் கல்வி அபிவிருத்திக்காக ரூ 1,28,00,000 செலவாகும் திட்டங்களுக்கு உதவி கோரி மத்திய குழுவிடம் திட்டம் சமர்ப்பித்திருக்கிறது.

இந்தத் திட்டங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அமையுமாம்.

கிண்டியிலுள்ள, அனந்தப்பூர் ஆகிய இடங்களிலிருக்கும் என்ஜினியரிங் கல்லூரிகளும், சென்னையில் உள்ள 'பாலிடெக்னிக்' பள்ளிகளும் உதவி பெற்று விரிவாக்கப்படுமாம்.

கடந்த அக்டோபர் 4-ம் தேதி பம்பாய் டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி தலைமையில் தென் பிராந்திய அபிவிருத்திக் குழு, மேற்படி திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படுவதற்கான சிபாரிசுகளைச் செய்துள்ளதாகத் தெரிகிறது.

'ஏர் சிலோனி'ல் கள்ளத் தங்கம்!

கடத்திய விமான அதிகாரிகளுக்கு அபராதம்

கொழும்பு, அக் 6—

சென்னையிலிருந்து கொழும்பு வந்த 'ஏர் சிலோன்' விமான மொன்றிலிருந்து இலங்கையைச் சேர்ந்த சுங்க அதிகாரிகள் 8 பவுண்டு நிறையுள்ள ரூ 40,000 மதிப்புள்ள தங்கத்தைக் கைப்பற்றினர்.

விமானத்தின் 'கம்பியில்லாத் தந்தி' அனுப்பும் இயந்திரத்தின் அடியில் இரண்டு பார்சல்களாக அந்தத் தங்கம் மறைக்கப்பட்டிருந்ததாம்.

விமானஓட்டிகள் இருவருக்கும் முறையே ரூ. 5000, ரூ. 4000, அபராதமும், 'ரேடியோ' அதிகாரிக்கு ரூ 18,000 அபராதமும் விதிக்கப்பட்டதாம் — விசாரணைக்குப் பின்.

'ஏர் சிலோன் கார்ப்பரேஷன்' நிர்வாகி அந்த மூன்று அதிகாரிகளும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் விசாரிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்துள்ளார் எனத் தெரிகிறது.

சியாங் பணிவு!

தாக்குதலை நிறுத்துகிறார்!

அமெரிக்க நிர்ப்பந்தமே காரணமாம்!

தைபே, அக் 6—

தேசியச் சீன கப்பல் படையும், விமானப் படையும், கம்யூனிஸ்டு சீனப் பிரதேசங்களைத் தாக்குவதினின்றும், அமெரிக்க நிர்ப்பந்தத்தின் காரணமாக நிறுத்திவிட்டன என்று சொல்லப்படுகிறது.

பார்மோசாவில் உள்ள அமெரிக்க இராணுவ பிரதம ஆலோசகர் மேஜர் ஜனரல் வில்லியம் சேசின் ஆலோசனையின் படி, தேசிய சீன அதிகாரிகள் தங்கள் படையினருக்கு, கம்யூனிஸ்டு சீனப் பிரதேசங்களைத் தாக்குவதை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனராம்.

மாவோ அமெரிக்கரின் ஏழாவது கடற்படை, தேசியச் சீனாவைச் சேர்ந்த பியூசின், மைசு போங், ஆமாய் முதலிய பிரதேசங்களை, கம்யூனிஸ்டு சீனத் ...

துர்க்காதேவியின் அருளால் தெருவில் அலைந்த பக்தர்கள்

பெண்களை பறிகொடுத்து பதறினராம்

பெற்றோரைப் பிரிந்த குழவிகள் போலீஸ் ஸ்டேஷனில் விம்மல்!

கல்கத்தா, அக். 6—

கல்கத்தாவிலும், ஹௌராவிலும் நேற்றிரவு துர்க்கை பூஜை விமரிசையாய் நடைபெற்றபோது கூடியிருந்த ஏராளமான கூட்டத்தில் பலர் தங்கள் குழந்தைகளையும், மனைவிகளையும் 'பறிகொடுத்து' வழி தவறி நின்றனராம்!

வழி தவறியவர்களில் 50 பேருக்கு மேல் பெண்கள் தானாம்! அவர்கள், தங்களுடன், திருவிழாவைக் கண்டு களிக்க அழைத்து வந்த தந்தையரையோ, கணவன்மார்களையோ காணாது, தவியாய்த் தவித்தனராம்!

இருபத்தைந்துக்கும் அதிகமான குழந்தைகள் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தனவாம்; அக்குழந்தைகளெல்லாம், தங்களுடைய பெற்றோரைக்காணாமல், விம்மி விம்மி அழுதனவாம்!

நடு இரவு வரை 10 குழந்தைகள் மட்டுமே அவைகளின் பெற்றோரால் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டனவாம். எஞ்சிய குழந்தைகளின் பெற்றோரைத் தேடிக் கண்டுபிடிப்பதில், போலீசார் தீவிரமாக ஈடுபட்டனர் எனத் தெரிகிறது.

துர்க்கா பூஜை விழாவில் இளைஞர்கள் கலாட்டா!

அஸ்ஸாமில் நடைபெற்ற சம்பவம்!

பார்பேட்டா (அஸ்ஸாம்) அக். 5—

துர்க்கை பூஜை விழாவினை யொட்டி, பூஜா மண்டபத்தில் கூடியிருந்த ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும், பூஜையை ஏற்பாடு செய்திருந்த நிர்வாகிகளையும் சில இளைஞர்கள் தாக்கியதின் விளைவாக விழா குழப்பத்தில் முடிந்தது.

இளைஞர்கள் பூஜையைக் கலைக்க நடத்திய தாக்குதல் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளதாம்!

வீட்டை விட்டு வெளியே வருவதற்கு பயமாயிருக்கிறதாம்! மற்றெல்லோரும் இந்தச் சம்பவத்தால் கலக்கமுற்று, வீட்டிலேயே அடங்கிக் கிடக்கின்றனராம்!

வேண்டாதவரை எல்லாம் வீணாகக் கைது செய்யும் போலீசார்

கையாட்களுக்குக் காசு கொடுத்து, சாட்சிகளாக்கும் போக்கு!

கண்டிக்கத்தக்கதென நீதிபதி கண்டனம்

"சாராயமோ, அல்லது தடை செய்யப்பட்ட பொருளோ இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படுகிற இடத்திலோ, அல்லது அருகிலோ இருக்கும் எல்லோரையும்—ஆண், பெண், குழந்தைகள் உட்பட—கைது செய்கிற வழக்கம் போலீசாரிடை இக்காலங்களில் மலிந்து கிடக்கிறது. போலீசார் கையாளுகிற அத்தகைய 'பயமுறுத்தும் தந்திரங்கள்' வெறுக்கத்தக்க கண்டிக்கப்பட வேண்டியவை; ஏனெனில், அவை இந்திய அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள ஜனநாயக அம்சங்களை பாதிப்பவையாகும்."

—என்று, மதுவிலக்கு வழக்கு ஒன்றில் குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை விடுதலை செய்த தீர்ப்பளிக்கையில் பம்பாய், மசகான் நீதிமன்றத்தைச் சேர்ந்த மாஜிஸ்ட்ரேட் ஜேம்ஸ் மெல்லன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பீட்டர் ஏ. ரோச் என்பவரும், அவர் மனைவி, மேலப்பன் என்பவரும் கள்ளச் சாராயம் காய்ச்சியதாகவும், சாராயம் வைத்திருந்ததாகவும் கைது செய்யப்பட்டு மதுவிலக்கு மீறியதாக வழக்குத் தொடரப்பட்டனர்.

அவர்களை எல்லாம் விடுதலை செய்துவிட்டு மேலும் நீதிபதி சாட்சிகளைப் பற்றி குறிப்பிட்டதாவது:—

"'தன்னுடைய சொந்தக்காரன்' எனக் கூறும் ஒரு சாட்சியான அல்போன்ஸ் லட்சுமணன் என்பவர், போலீசாருக்காக, 60 முதல் 60 வழக்குகளில் சாட்சியம் கூறியிருக்கிறார்.

ஏதாவது ஒரு வழக்கிற்கு சாட்சியம் சொல்ல, அந்தச் சாட்சி, தவறாது தினக்கூலியாகும் நீதிமன்றத்திற்கு வருகிறார்.

மார்டின் டேவிட் என்ற மற்றொரு சாட்சியும் 15 முறைகள் சாட்சியம் அளித்து போலீசாருக்கு உதவியாக இருக்கிறார்.

எனவே, அத்தகைய சாட்சிகளின் கூற்றில் ஒரு வார்த்தையைக் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் எல்லாம் போலீசார் 'வாடகை'க்கு அமர்த்திடும் கையாட்கள்; அவ்வளவுதான்!

பனிப் பாறையில் 20 பேர் புதைந்தனர்!

தென் காஷ்மீர் பகுதியில் சென்ற வாரம் பெய்த பெரிய மழையிலும், பனிக்கட்டி வீழ்ச்சியிலும் சுமார் 20 பேர் பனிப்பாறைகளுள் புதைந்து இறந்துவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

படைகள் தாக்குதலினின்று தடுக்க வேண்டுமென்று, அமெரிக்க இராணுவ ஆலோசகர் உறுதியளித்திருக்கிறாராம்.

இதற்கிடையில் தேசிய சீன பாதுகாப்பு இலாக்கா, ஒரு அறிக்கையில், கம்யூனிஸ்டு சீன படையினர், பயணிகள் கப்பல் மீது ஜெட் விமானங்கள் கொண்டு தங்கள் பிரதேசங்களை பலமாகத் தாக்கி வருவதாக குறிப்பிட்டுள்ளது.

ஊழல்கள் நிறைந்த இந்திய தூதுவராலயங்கள்!

மக்கள் வரிப் பணம் பாழாகும் படலம்!

ஐந்தாண்டுத் திட்டம் ஓர் அங்குலமும் முன்னேற வழியில்லை!

நமது நாட்டு வரிப்பணம், பெரும்பாலும் ஏழை, எளியவர்களிடமிருந்தே வசூலிக்கப்படுகிறது; மக்கள், ஒவ்வொரு துளி இரத்தமாகச் சிந்தி, வரி செலுத்துகிறார்கள்; அந்த வருமானத்தின் பெரும் பகுதியை வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதுவர்களின் காரியாலயத்தின் 'தண்டச் செலவு'களும், இராணுவச் செலவுகளுமே விழுங்கி வருகிறது!

இந்தத் தூதுவராலயங்கள், விவகாரங்களில் கோட்டை விடும் பணம் கோடிக்கணக்கில் இருக்கிறது.

பொதுவாக, இந்தத் தூதுவராலய விவகாரங்களே வெறும் ஊழல் மயந்தான்! இம்மாதிரியான ஊழல்களை வைத்துக்கொண்டு, இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்தாலும், நாடு ஒரு அங்குலம்கூட முன்னேறாது என்பது உறுதி!

இந்தியாவின் ஏழை மக்களிடம் வசூலிக்கப்படும் வரிப்பணம், வெளிநாடுகளில் தண்ணீராகக் கரைகிறது என்பதை கீழே உள்ள புள்ளி விபரங்களும், உண்மைகளும் தெளிவாக விளக்கும்:—

இங்கிலாந்தில்:

இங்கிலாந்தில் உள்ள இந்திய ஹைகமிஷனரின் காரியாலயச் செலவு—அமெரிக்காவில் உள்ள இந்திய ஸ்தானிகாலய செலவைக் காட்டிலும் மூன்று மடங்கும், ரஷ்யாவில் உள்ள ஸ்தானிகாலயத்தின் செலவைக் காட்டிலும் நான்கு மடங்கும் உயர்ந்தது.

சில நாட்களுக்கு முன்பு வரை ஹைகமிஷனராகயிருந்த வி. கே. கிருஷ்ண மேனன் அவர்களும், காரியாலய அதிகாரிகளும் இங்கிலாந்திலுள்ள பிரபுக்களின் வாழ்க்கைக்கு இணையாக வாழ்ந்தார்கள். அந்தக் காரியாலயத்தில் ஏராளமான அதிகாரிகளும், குமாஸ்தாக்களும் இருக்கின்றனர்; அவர்களுக்கென்றே கோடிக்கணக்கான ரூபாய் செலவில் ஒரு கட்டிடமும் கட்டப்பட்டிருக்கிறது!

தற்சமயம் மேற்பட்ட பெண் டைப்பிஸ்டுகள் மட்டும் இக்காரியாலயத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்றும், மற்ற குமாஸ்தாக்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்!

இங்கிலாந்தில் உள்ள உயர்தர சிகரெட் வாங்குகின்றவர்கள், இங்கிலாந்தில் கோடீஸ்வரர்களுக்கு அடுத்தபடியாக இந்திய ஹைகமிஷனரின் காரியாலய அதிகாரிகளும், அமெரிக்கத் தூதராலய அதிகாரிகளும்தான்!

லண்டன் தெருக்களிலே விலை உயர்ந்த கார் ஒன்று சென்றால்—ஒன்று, அது இந்திய கமிஷனர் காரியாலயக் காராக இருக்க வேண்டும்; அல்லது அமெரிக்க தூதராலயக்காராக இருக்க வேண்டும்—என்று இங்கிலாந்து மக்கள் 'கேலி' பேசும் அளவுக்கும் பல உயர்ந்த ரகக் கார்கள் இருக்கின்றன; காரணம், இங்கிலாந்து மக்கள், இங்கிலாந்திலே தயாரிக்கப்பட்ட சாதாரண, விலை குறைவாக உள்ள கார்களை வைத்துக் கொள்வதையே நாகரிகம் என்று கருதுகின்றனர்.

ஹைகமிஷனர் காரியாலயச் செலவுகள் 1948-49ம் ஆண்டில் ரு 39,43,910; ஆனால், இது, 1951-52ல் ரு 57,38,000 ஆக உயர்ந்தது—அதாவது, அரை கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்படுகிறது, ஆண்டு ஒன்றுக்கு!

ஆனால், கிருஷ்ண மேனன் திரும்பிய பிறகு பி. ஜி. கேர் ஆட்சியில் பல செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டு சிக்கனம் செய்யப்பட்டிருக்கிறது, என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில்:

1948-49 ஆண்டில் அமெரிக்காவிற்கு தூதுவராக திருமதி விஜயலட்சுமி பண்டிட் நியமிக்கப்படும் வரை அங்குள்ள இந்தியத் தூதுவராலயச் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரு 12,24,3000; ஆனால், அம்மையார் சென்றவுடன் 1949-50ம் ஆண்டு செலவு ரு 17,41,200 ஆக உயர்ந்தது; இது, வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது; ஆனால், உண்மையில் ஏற்பட்ட செலவு ரு 17,59,066; இந்தச் செலவு, 1950—51-ம் ஆண்டில் ரு 19,77,116 ஆக உயர்ந்தது.

திருமதி விஜயலட்சுமி திரும்பியவுடன் ஜி. எல். மேத்தா அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்; ஆனால், அவர்கூட அந்தச் செலவைக் குறைக்க எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளவில்லை!

ரஷியாவில்:

ரஷியாவிலும் சில நாட்கள் திருமதி விஜயலட்சுமி பண்டிட் தூதுவராக இருந்தார். மற்ற நாடுகளைப்போல இங்கு அதிகம் செலவு செய்ய இயலவில்லை. காரியாலயத்திலகூட குறிப்பிட்ட அளவுதான் ஆட்களை வைத்துக் கொள்ள முடியும். அப்படி இருந்தும், அவர் இருக்கும்போது, 1948—49-ம் ஆண்டு செலவு ரு. 8,60,362; ஆனால், அதற்கடுத்த ஆண்டுகளில் இப்போது இந்தியாவின் உப ஜனாதிபதியாக இருக்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தூதராக அனுப்பப்பட்டார்; அவர் இருக்கும்போது செலவுகள் குறைந்து ரு. 7,15,589 ஆயிற்று.

திருமதி அம்மையார் தூதுவராக ரஷியாவில் பதவி ஒப்புக் கொண்டவுடன் காரியாலயத்தில் இருந்த 'மரச் சாமான்கள் மிகப் பழமையாகவும், அநாகரீகமாகவும் தென்பட்டனவாம்! அதனால், லட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டு புதுமுறையான மரச்சாமான்களை அமெரிக்காவிலே விலைக்கு வாங்கி, ஆகாய விமானத்திலே எடுத்துச் சென்றார்களாம்!

இப்போது திரு. கே. பி. எஸ். மேனன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவராவது செலவைக் குறைத்தாரா? இல்லை; இந்த மகானுபாவர், அதை இரட்டிப்பாக்கி விட்டார்; இப்போது அதற்கு 14 லட்சம், ரூபாய் அனுப்பப்படுகிறது!

சைனாவில்:

இங்கு, இந்தியத் தூதுவராலயத்திற்கு 1948—49-ம் ஆண்டு செலவு ரு. 4,82,185; ஆனால், 1954—55-ம் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ஒதுக்கப்பட்டிருப்பது ரு 6,80,000!

பிரான்ஸில்:

பாரிஸ் மாநகரில் உள்ள தூதுவர் திரு. மாலிக் என்பவர். இங்கு நடைபெறும் விஷயங்களோ அதி அற்புதமானவை. இந்தத் தூதுவராலயத்திற்கு 1949—50ல ஒதுக்கப்பட்டது ரு 2,60,000; ஆனால், அவர்கள் செய்த செலவு ரு 5,76,828.

ஒதுக்கப்பட்ட தொகைக்கும், உண்மையில் ஏற்பட்ட செலவு தொகைக்கும் எவ்வளவு வேறுபாடு பார்த்தீர்களா? ஏதாவது கேள்வி கேட்பாரே இருந்தால் தானே?

ஆனால், 1950—51ல், செலவு தொகை இந்தத் தூதுவராலயத்திற்கு ரு. 10,58,798!

—'சோஷலிஸ்ட்.'

தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

கூட்டுறவு முறையில் துவக்க சர்க்கார் உதவும்!

விருதுநகர், அக். 4—

தீப்பெட்டித்தொழிற்சாலைகள் கூட்டுறவு முறையில் நடத்தப்படுமானால் அவற்றிற்கு சர்க்கார் பண உதவி செய்யும் என்று தெரிகிறது.

இங்கு நடைபெற்றக் கூட்டமொன்றில் சென்னை மாநில கூட்டுறவு அதிகாரியான திரு. ஜே. சி. ரயன், ஒவ்வொருவரும் ரு. 1,500 முதலீட்டுடன் பலர் சேர்ந்து, தீப்பெட்டித் தொழிற்சாலை நடத்துவதானால் சர்க்கார் ரு 10,000 உதவியும், ரு 50,000 கடனும் கொடுத்துதவும் என்று தெரிவித்தார்.

கூட்டுறவு முறையில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சாத்தூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பாவின் பெருமை மிக்க அமைதி!

டாக்டர் அடினர் பேச்சு

மேற்கு ஜெர்மனி சான்சலரான டாக்டர் அடினர் மக்கள் சபையில் பேசுகையில், "நாம் மிகவும் பிற்போக்கான தேசியக் கொள்கையைக் கைவிட்டு விட்டோம் என்பதை உலகுக்கு அறிவித்து விட்டோம்," என்று குறிப்பிட்டார்.

மக்கள் சபையில், லண்டனில் நடைபெற்ற ஒன்பது வல்லரசுகள் மாநாட்டின் முடிவு பற்றிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து அவர் ஐரோப்பாவில் நிலவும் ஒற்றுமையைப் போற்றுவது தான் ஐரோப்பாவினுடையவும், ஜெர்மனியினுடையவும் பெருமை மிக்க அமைதியான வாழ்வு இருக்கிறதென்றும், இந்த மாநாட்டைத்தான், சமீப கால சம்பவங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்றும் குறிப்பிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சீன—நேபாள ராஜீய உறவு

பேச்சுவார்த்தைகள் துவங்கிவிட்டன

காட்மண்டு, அக். 6—

செஞ்சீனா, நேபாளம் ஆகிய இருநாடுகளுக்கிடையேயும் சுமுகமான ராஜீய உறவுகள் உருவாக்கப்படுவதற்கான பேச்சு வார்த்தைகள் ஏற்கனவே துவங்கிவிட்டனவாம்.

இது பற்றி பீகிங்கிலிருந்து நேபாள அரசாங்கத்திற்குக் கடிதம் ஒன்றும் வந்துள்ளதாகத் தெரிகிறது.

திருச்சி-உறந்தை தி. மு. கழகம்

3—10—54ல், நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சி கல்யாணசுந்தரம் குமார் அருணாசலம், தோழர் அனிக் அவர்களின் தாயார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், திருச்சியில் நடந்த தம்பாக்கிப் பிரயோகத்தை வன்மையாகக் கண்டித்தும், அதில் உயிர்நீத்தத் தோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களின் கூட்ட வரவு—செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆமதாபாத்— ஜமால்பூர் தி. மு. கழகம்

3—10—54 மாலை சரோடா தி மு கழக மன்றில் தோழர் மு. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் இந்திகள் நடுவில் கழக ஆண்டுவிழா நடத்துவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டு விழாவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: நா. தேவராசு; செயலாளர்: நா. முனுசாமி; பொருளாளர்: ஜ. ஆதிமூலம்; விழா கூட்டத் தலைவர்: புதுவை-வைத்தியநாதன்; வரவேற்பாளர்: இரா. தணிகாசலம்.

சூலூர் தி. மு. கழகம்

26—6—54ல், பெரியார் மைதானத்தில் தோழர் அற்புதசாமி தலைமையில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கூட்டத்தில், திராவிட நாடு பிரிவேண்டியதின் அவசியம் பற்றியும், நடைபெறவிருக்கும் மாவட்டக் கழகத் தேர்தலில், தி. மு. கழகத்தின் பங்கு பற்றியும், மாற்றுக் கட்சித் தோழர்களின் தவறான பிரசாரங்களைக் கண்டித்தும் தோழர் ஆறுமுகம், வளர்காமுடி, கெ. டி. தண்டபாணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் சென்ற ஆண்டு நடைபெற்றப் போராட்டத்தில் உயிர்நீத்தத் தோழர்களுக்கு வீர வணக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்தும், டால்மியாபுரம், கல்லக்குடி வழக்குகளை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், கல்லக்குடி என்னும் பெயரை அமுலாக்க ஆவன செய்யுமாறு முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருதை தி. மு. கழகம்

3—10—54ல் தோழர் சிவசண்முக சுந்தரம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர் கே. எஸ். எஸ். சுப்பையாச்சாமி அவர்கள் பொருளாளர் பதவியிலிருந்து விலகி தற்காலிகமாக செயலாளர் ரத்தினம் அவர்களே பொருளாளராக பணியாற்ற முடிவு செய்யப்பட்டது.

வாய்ப்பு இருந்த வரை பதவி வேட்டைக்குப் பாதுகாப்பளித்தார்!

நெருக்கடி தெரிந்ததும் 'சீ! சீ! அந்தப் பழம் புளிக்கும்!' என்கிறார்!

சொந்தமக்களாடி டி.வி.எஸ். பாதையை பின்பற்றத் திருவாய் திறக்கிறார்!

'பிராமணர்' என்ற சொல்லுக்குப் புதிய பொருள் தருகிறார்!

பார்ப்பனர் நலம் பெருக சி. ஆர். சீனிவாசன் தரும் திட்டம்

"பண ஆசை இல்லாமல், உண்மையான அறத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்களுக்குத்தான் 'பிராமணர்' என்ற பெயர் இருந்துவந்தது."

"பிராமணர்களுக்கு இயற்கையாகவே திறமையும், சிந்தனையும், செயலாற்றும் சக்தியும் இருக்கின்றன; அவைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, வருங்காலத்திலாவது அந்தச் சமூகத்தினர் தாங்கள் வாழ்வதுடன், மற்றவர்களும் நன்கு வாழ்வதற்கு வசதி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

—என்று, மதுரைக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'பிராமண சமூகச் சங்க'க் கூட்டத்தில் கலந்துகொண்ட, 'சுதேசமித்திரன்' இதழ் ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"அரசாங்க உத்தியோகங்களில் நம்பவேதுதான் தங்கள் கடமை என்ற எண்ணத்தைப் பிராமணர்கள் முதலில் கைவிட வேண்டும்; அப்படி அவர்கள் அந்த எண்ணத்தை விடுவார்களானால், இன்று நாட்டில் நிலவும் பிராமணர்—பிராமணரல்லாதார் எனும் வேற்றுமைக்கு இடம் இல்லாமல் போய்விடும்; நூற்றுக்கு 3 பேர்களே உள்ள பார்ப்பனரைக் கண்டு பிராமணரல்லாதார் பயப்படவும் தேவையில்லை; அறிவும், இந்தச் சிக்கல் தென்னாட்டில் மட்டும் தான் இருக்கிறதே தவிர வடநாட்டில் கிடையாது; பிராமண சமூகத்தினரிடையே நாணயம் இன்னும் வளர வேண்டும்; பிராமணர்கள் அரசாங்க உத்தியோகங்களை மட்டுமே நம்பியிராமல் வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு, மதுரை டி. வி. எஸ். நிறுவனத்தினரைப் போன்றும் முன்னேற்றமடையலாம்; இதற்கெல்லாம் பணம் எங்கே என்று கவலைப்பட தேவையே இல்லை; யோக்கியமும், நாணயமும் இருந்தால் அதன் மூலம் எது வேண்டுமானாலும் செய்யலாம்."

தசரா ஊர்வலம் ஒரு பெண்ணை பலி கொண்டது!

காளை மிரண்டதால் பலரும் காயமுற்றனர்!

கோலாகல திருவிழாவில் கோரக்காட்சி

மைசூர், அக். 7—

வெகு விமரிசையாக நடைபெற்று வரும் தசரா விழாவின் இறுதி நாளன்று, ஆடம்பரமாக வகுத்துவந்த ஊர்வலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் காரணமாக ஒரு பெண் கொல்லப்பட்டதும், பல குழந்தைகளுட்பட 35 பேர்கள் படுகாயமடைந்ததுமான செய்தி வெளிவந்துள்ளது.

ஊர்வலத்தின் ஒரு பகுதியான 'பீரங்கி வண்டி' இழுத்து வந்த பெரிய இரு காளை மாடுகள் ஊர்வலம், சப்பாணி ராவ் ரஸ்தாவை அடைந்தபோழுது, வண்டியை இழுத்துக்கொண்டு கூடியிருந்த கூட்டத்தினர் மீது மூர்க்கத்தனமாகப் பாய ஆரம்பித்தன. வண்டியும், கூட்டத்தினர் இருந்த நடைபாதை அருகே இழுத்துச் செல்லப்பட்டது. கூடியிருந்த ஆண்களும் பெண்களும் தப்பித்துக் கொள்ள இங்குமங்குமாக ஓடினர். அப்படி ஓடுகையிலேயே பலர் வண்டிச் சக்கரத்தின் அடியேயும், மாடுகளின் குளம்புகளின் அடியிலேயும் சிக்கிக்கொண்டனர்.

காயம்பட்டவர்கள் எல்லோரும் உடனே மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை தரப்பட்டனர். அவர்களில் திருவம்மா என்ற இருபது வயதுப் பெண்மணி பலத்த காயங்களுக்குப் பலியானார். அவரது கையிலிருந்த குழந்தை [illegible] காயமின்றித் தப்பியது.

மருத்துவ மனையிலிருக்கும் 34 பேரில் சுமார் 5 பேருக்கு அதிகமான காயங்களின் நிலை மிக அபாயகரமானதாயிருக்கிறது.

காலஞ்சென்ற அம்மையார் மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றும் கிளார்க் சான்திரி என்பவரின் மனைவியாம்.

இந்தக் கோர சம்பவத்தைக் கேள்வியுற்ற ராஜப் பிரமுகர், 'ஒளி விளக்கு அணிவகுப்பு' தேவையில்லை என ரத்துசெய்து விட்டாராம்.

21 அப்பாக்கிகள் குண்டுகளை வெடிக்க, பாண்டு வாத்தியங்கள் முழங்க, தேசிய கீதம் ஒலிக்க, ஆடம்பரமாக ஊர்வலம் மாலை 4-30 மணிக்குப் புறப்பட்டதாம்.

மைசூர் ராஜப் பிரமுகர், ஏராளமான 'ராஜவேடத்தில்' உடையணிந்து, பொன்னும் மணியும், மின்னும் வைரமும் பதித்த 'கிரீடம்' பூண்டு, அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த யானை மீது அமைக்கப்பட்டிருந்த தங்கத்திலான அம்பாரி மீது ஒய்யாரமாக அமர்ந்து கொண்டு, ஊர்வலத்தில் 'கம்பீரமாக' வந்து கொண்டிருந்தாராம்.

லட்சோபலட்சமான மக்கள் கண்டு களித்தனராம். ஏராளமான மகாராஜாக்களும் பிரமுகர்களும் அணிவகுப்புடன் ஊர்வலம் அரண்மனையிலிருந்து பன்னி மண்டபத்தை அடையு முன்னர்தான், அந்தக் கோர நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

இந்த தசரா திருவிழாவினையொட்டி, ஆண்டு தோறும் வழக்கமாக நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்த ஆண்டு 'மல்யுத்தம்' நடைபெறவில்லை. காரணம், சென்ற ஆண்டு இந்த விழாவின்போது, தமிழ் நாட்டைச் சேர்ந்த மல்யுத்த வீரர்களுக்கும், [illegible] வீரர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறின் விளைவாகக் குழப்பம் ஏற்பட்டு, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் நிலைமை ஏற்பட்டு ஊர்வலத்தையே ரத்து செய்ய வேண்டியதாய்ப் போய்விட்டதுதான்!

பம்பாய் நகர சபை

ரூ $2\frac{1}{2}$ கோடி கடன் எழுப்புகிறது

பம்பாய், அக். 7—

நகரின் குடி தண்ணீர், சாக்கடைத் திட்டங்களுக்காக பம்பாய் நகர சபை அக்டோபர் 13-ம் தேதியன்று ரூ $2\frac{1}{2}$ கோடி கடன் எழுப்பும் என்று தெரிகிறது.

1964 செப்டம்பரில் திருப்பிக் கொடுக்கப்படும். இக்கடனுக்கு நான்கு சத வீத வட்டி உண்டென்று தெரிகிறது. இக்கடனை எழுப்ப பம்பாய் நகர சபைக்கு பம்பாய் மாநில சர்க்கார் அனுமதி அளித்துள்ளனர்.

இதுபோன்ற கடன் ஒன்றை பம்பாய் நகர சபை சென்ற ஆண்டும் எழுப்பியது.

துர்க்கா தேவி தீக்கிரை!

பந்தலும் வெந்து சாம்பலாயிற்று!

கல்கத்தா, அக். 7—

வடக்குக் கல்கத்தா தோலிகஞ்ஜ் பகுதியில், துர்க்கா பூஜைக்கென விசேஷமாக போடப்பட்டிருந்த பந்தல், பூஜை தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்குமுன் வெந்து சாம்பலாகிவிட்டது.

பந்தலைப் பற்றிய தீ, தெய்வச் சிலையான துர்க்கா தேவிக்கும் விலக்களிக்காமல், அத்தேவியையும் சுருக்கி நாசமாக்கி விட்டது. தேவியார் வீற்றிருந்த அலங்கார மேடையையும் நெருப்பு சுட்டெரித்து விட்டது!

பட்டம் ஆட்சியில் கொச்சி மக்கள் கசப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இருந்து வருகிறது.

பி.-சோ. கட்சி சட்டசபை உறுப்பினர்கள்கூட கொச்சிப் பகுதியினர் தனிக் குழுவாக இயங்கி வருவதுடன், தற்போதுள்ள தலைமையிடத்தில் நல்ல சமூகமான உறவு கொண்டவர்களாக இல்லை.

முதன் மந்திரி, தன்னுடைய யோசனைகளையும் கருத்துக்களையும் புறக்கணித்து அலட்சியப்படுத்துவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இப்படி இருந்துவந்த இந்த கோஷ்டிச் சண்டை வளர்ந்து, ஒரு பெரும் பிளவு தோன்றுமளவுக்கு அகில இந்திய பி.-சோ. கட்சியின் தலைமை குறுக்கிட்டு, பிளவை ஒட்டப்போட வேண்டிய அளவுக்கு நிலைகள் வளர்ந்துள்ளன.

கொச்சிப் பகுதி சட்டசபை பி.-சோ. உறுப்பினர்கள் இன்னும் கட்சியை விட்டு விலகவில்லை. தவிர, கட்சித் தோழர்களிடையே இந்தப் பிளவு மனப்பான்மை வளர்ந்தே இருக்கிறது.

இப்போது எழுந்த இந்தக் கசப்புக்குக் காரணம், திருவாங்கூரிலும், கொச்சியிலும் தனித் தனியாக இருந்துவந்த சர்க்கார் அலுவலக விதிமுறைகளை ஒன்றாக இணைத்து இரு பகுதிகளுக்கும் ஓரே விதிமுறையாக்க திரு.-கொச்சி பி.-சோ. மந்திரி சபை உத்தரவிட்டதே என்று தெரிகிறது.

திருவாங்கூரும், கொச்சியும் ஒன்றாக இணைக்கப்படுவதற்கு முன்னால், இரண்டிற்கும் தனித் தனியான அரசாங்க பணியின் உத்தரவுகள் இருந்தன. ஆனால் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்ட பின், ஆட்சிக்கு வந்த முதல் காங்கிரஸ் மந்திரி சபைக்கு இது ஒரு பெரும் பிரச்னையாகவே இருந்தது.

இணைக்கப்பட்ட ஒரு ராஜ்யத்தின் சர்க்கார் அதிகாரிகள் இரண்டு வகை நடைமுறை விதிகளால் கட்டுப்பட்டவர்களாக இருக்கும் குழப்பிய நிலை நீடித்துக் கொண்டே இருந்தது. திருவனந்தபுரத்தைச் சார்ந்த அதிகாரிகள் கொச்சியில் பணி புரிந்ததாலும், கொச்சியைச் சார்ந்தவர்கள் திருவனந்தபுரத்தில் பணி புரிந்ததாலும் இந்தக் குழப்பம் [illegible].

பி. சோ. கட்சி சென்ற ஆண்டு மந்திரி சபை அமைந்ததும் இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணும் நோக்குடன் ஒரு விசேஷ அதிகாரியை நியமித்து பரிகாரம் தேடச் செய்தார்கள். அந்த அதிகாரி தந்த திட்டப்படி, இரண்டு பகுதிகளுக்கும் ஓரே விதிமுறைகள் உருவாயின. இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பித்ததை, கொச்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள். புதிய திட்டம் தங்களுக்குப் பாதகமானது என்றும், எனவே ஒரு விசேஷ மாநிலத்தவரைக்கொண்டு இந்த சிக்கலான பிரச்சினைக்கும் பரிகாரம் தேடவேண்டும் என கொச்சிக்காரர்கள் கூறுவதாகவும் தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளுக்கு சிறைவாசம்

131 கம்யூனிஸ்டுகளுக்கு 6 மாதம் முதல் 10 ஆண்டு காலம் வரையில் சிறை தண்டனை கொடுத்திருக்கிறது, ஈராக்கி இராணுவ நீதி மன்றம்.

ஆப்பிரிக்கர்களிடையே கலகம்

2 பேர் மாண்டனர்

நேற்றிரவு இங்கு 600 ஆப்பிரிக்கர்கள் ஆயுதம் ஏந்திக் கலகம் செய்தனர். அம்பாக்கிகள், கத்திகள், தடிகள் இவைகளுடன் அவர்கள் நடத்திய கலகத்தில் இரண்டு ஆப்பிரிக்கர்கள் மாண்டதுடன், 11 பேர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

காயமடைந்தவர்களில் நான்கு பேருக்குத் துப்பாக்கிக் குண்டுகளால் காயம் ஏற்பட்டிருந்ததாம்; மற்றவர்கள் கல்வீச்சினால் காயமுற்றனராம்!

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

மீர்சாகிப்பேட்டை, வெங்கடாசல முதலித் தெரு, பிள்ளையார் கோயில் பின்புறமுள்ள திடலில் 10—10—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: ப. கன்னியப்பன்

பேசுவோர்:

மு. கருணாநிதி

முகவை ஆர் எஸ். பாண்டியன்

இளம்பரிதி

★

மூவலூர் (மாயூரம்)

சுந்தரம் பூங்கா அருகில் 10—10—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: க. ராமையா

பேசுவோர்:

எ. வி. பி. ஆசைத்தம்பி

என். கிட்டப்பா

எஸ். கனகசபை

ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் படிப்பக வளர்ச்சி நிதிக் கூட்டம்

10—10—54 காலை 9 மணிக்கு சென்னை லட்சுமி திரைப்படம் (பெரம்பூர் பேரக்ஸ்) சென்னை 17-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில், ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் படிப்பக நிதிக் கூட்டம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கண்ணதாசன், கே. ஆர். ராமசாமி ஆகியோர் பேசுவர். நன்கொடை அணா 4.

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

10-10-54 காலை 10 மணிக்கு சேலம் லீபஜாரில், தோழர் ஏ. ஆர். கிருஷ்ணன் மண்டியில் சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அது சமயம் பல முக்கிய விஷயங்கள் பற்றிப் பேசப்படும்.

சென்னை மாகாண மீனவர் ஐக்கிய முன்னணி மாநாடு

10—10—54 காலை 9 மணிக்கு சென்னை, சர். தியாகராயர் கல்லூரியில், சென்னை மாகாண மீனவர் ஐக்கிய முன்னணி மாநாடு தோழர் எ. மாசிலாமணி மணியக்காரர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். பக்தவத்சலம், பி. வரதராஜலு நாயுடு, என். ஜீவரத்தினம், டாக்டர் [illegible] பாலசுந்தரம் மற்றும் பலர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

9—10—54 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, கொண்டித்தோப்பு, எண். 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில், தோழர் மயிலை சிவமுத்து அவர்கள் 'அன்புடைமை' என்பது பற்றிப் பேசுவார்.

கோவை நகர பஞ்சாலை தொழிலாளத் தோழர்கட்கு

10—10—54 மாலை 3 மணிக்கு கோவை நகர சிதம்பரனார் பூங்கா மைதானத்தில் தி. மு. கழக பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு பஞ்சாலைத் தொழிலாளர் அனைவரும், குறிப்பாக, ஸ்டேன்ஸ் மில், சோமசுந்தரா மில், காளீஸ்வரா மில் தொழிலாளர்கள் தவறாமல் வரும்படி தோழர்கள் [illegible] (காளீஸ்வரா மில்), [illegible] (ஸ்டேன்ஸ் மில்) கேட்டுக்கொள்கின்றனர்.

மொராக்கோ.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சுல்தானை ஆதரித்து வரும் பல சிறு தலைவர்கள், தங்கள் தங்கள் பட்டை வாளை வெட்டி அவரிடம் தங்களுக்குள்ள பற்றுதலை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்களாம்!

பிரெஞ்சு பிரதமராக உள்ள மெண்டிஸ் பிரான்ஸ், மொராக்கோவில் உள்ள பயங்கர சூழ்நிலையை நன்கு உணர்ந்திருக்கிறார் என்றும், சுதந்தர பரிகாரம் உடனடியாகத் தேடுவதில் அக்கறையும் அவருக்கு இருக்கிறதென்றும், இருந்தாலும், அவருடைய அமைச்சர் குழுவில் மொராக்கோ விவகார மந்திரியாக இருக்கிறவர், அவருடைய முயற்சியைக் குலைத்து விடும் போக்குடையவராக இருக்கிறார் என்றும் மொராக்கோ சிக்கலை தீர்ப்பதற்கு, படைபலத்தை உபயோகித்து அம்மக்கள் மீது தாக்குதல் நடத்துவதுதான் சிறந்த வழி என ஏற்கனவே வெளிப்படையாக அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்றும் நிருபர் விளக்கியுள்ளார்.

'ஒரு வாள் கூடக்கும் இரத்தத்தை மொராக்கோவில் பெருக்கிவிட்டு, அவ்விரத்தத்தைத் தங்கள் கைத்திறனாக பிரெஞ்சுக்காரர்கள் இயக்குகிறார்கள்' என்பதுதான், மொராக்கோ நிலைமையில் பிரெஞ்சு அரசாங்கம் காட்டி வரும் பிடிவாதத்திற்கான காரணம் என, நிருபர் குறிப்பிட்டுள்ளார்.

கோவா விடுதலை வீரர்கள் 100 பேர் கைது!

கார்வார், அக். 7—

போர்த்துகீசிய ஆதிக்கத்திலிருக்கும் கோவாவில் 'காந்தி ஜெயந்தி' தினத்தன்று, இந்தியக் கொடியை ஏற்றுவதற்கு உரிமை முழக்கம் செய்த சுமார் 100 கோவா விடுதலைத் தொண்டர்களை, போர்த்துகீசிய போலீசார் கைது செய்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனி சுதந்திரம்

மக்கள் சபை அங்கீகாரம்

பான், அக். 7—

ஜெர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்குகிற லண்டன் ஒப்பந்தத்தை மேற்கு ஜெர்மனி மக்கள் சபை ஏற்றுக் கொண்டது.

டாக்டர் அடினூர், சபையின் முன் வைத்த அறிக்கையையும் சபை அங்கீகரித்ததுடன், இந்த ஒப்பந்தத்திற்கு மாற்றுத் திட்டமாக மீண்டும் 'நான்கு வல்லரசுகள்' மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்ற 'சோஷியல் டெமொக்ராடிக்' கட்சியின் தீர்மானம் ஒன்றை ஒரு தனிக் குழுவின் ஆலோசனைக்கும் சபை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

10-10-54 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை 94-95, புதுத் தெருவில், திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில், 'காமத்துப்பால்' தொடக்க விழா தோழர் முத்து, இராசக் கண்ணனார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஒ. இரா. கிருஷ்ணசாமி; கி. முருகேசனார் ஆகியோர் பேசுவர்.

[illegible] தோழர் இரா. [illegible] [illegible] அச்சகத்தில் [illegible] அன்னுதுரை [illegible]